முருகப்பெருமான் துணை

**மகான் திருநீலநக்க நாயனார் அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**13.03.2023**, திங்கட்கிழமை

1. சர்வபலம் தந்தருளும் அரங்கா
சற்குருவாய் வந்தருளும் தேசிகா
சீர்திருத்தம் உலகினில் புரிய
சித்திகளை கொண்ட குருராஜா
2. அரசனே ஞானியே உன் பெருமை கூறி
அகிலமதில் சுபகிருது சால் திங்கள்
இருபான் நவ திகதி சோமவாரம்
(சுபகிருது வருடம் மாசி மாதம் 29 ம் நாள், 13.03.2023, திங்கட்கிழமை)
இயம்புவேன் திருநீலநக்க நாயனாரும்
3. யானுமே அனுகூல ஆசிதனை
உலகநலம்பெற உரைப்பேன்
ஞானமாம் தரும நெறி காட்டும்
ஞானதேசிகன் சன்மார்க்க வழிதனை
4. வழிதனை ஏற்று உலகோர்
வழிமொழிந்து தொடர்ந்திட
பழிபாவம் நேரா வண்ணம்
பாதுகாப்பான வாழ்வாய் மாறும்
5. மாறுமே ஞானிகள் பூசையாக
மனத்தூய்மை மனபலமுடன்
ஆறுமுகனை வணங்கும் வாய்ப்பும்
அரங்கஞானிவழி காணும் வாய்ப்பும்
6. வாய்ப்பும் கண்டு உலகோர்
வள்ளல் தன்மை கூடியே
மெய்ஞான வாழ்வை அடைவர்
மேலவர்கள் தொடர்பும் கூடி
7. கூடியே குவலயம் தன்னை
குறைகள் பற்றா வண்ணம்
ஓடியே சேவைதனை ஆற்றி
ஒழுக்கமும் பாதுகாப்பும் மிக்க
8. மிக்கநல் ஞான பூமியாக
மண்ணுலகை மாற்றும் சேவை
ஆக்கமுடன் ஆற்றி சிறப்பர்
ஆறுமுகப் பெருமான் இறங்கி
9. இறங்கி சூட்சும வடிவில்
இவ்வுலகை வழிநடத்தும்படி
வரங்களை அடைந்து இனிதே
வையகத்தில் ஞானத்தலைமை

10. தலைமை படைத்து இனிதே
தக்க ஞானவான் நிறைந்த
உலகமெல்லாம் ஞான ஆட்சி
உயர்வாய் நடத்தி முடிப்பர்

11. முடிக்கவே உலக மாற்றம்
முழுமை தரும் அரங்கன் வசமே
நாடிவர உலகம் நலம்பெறும்
நாட்டிய அனுகூல ஆசி முற்றே

–சுபம்–